சிவபுராணச் சிந்தனைகள்



ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள்
கோவிலூர் ஆதீனம்



முல்லை
பதிப்பகம்

திருச்சி வானொலி உரை

ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகளின்

சிவபுராணச் சிந்தனைகள்

திருச்சி வானொலி உரை

ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகளின் 88வது பிறந்தநாளை முன்னிட்டு வெளியிடப்படுகிறது.

முல்லை
பதிப்பகம்
323/10, கதிரவன்காலனி,
அண்ணாநகர் மேற்கு, சென்னை-40.
தொலை: 26163596, 9840358301.
e-mail: mullaipathipagam.yahoo.com

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் தலைப்பு	:	சிவபுராணச் சிந்தனைகள்
நூலாசிரியர்	:	ஸ்ரீ நாச்சியப்ப சுவாமிகள்
மொழி	:	தமிழ்
பொருள்	:	வானொலி உரை
முதற் பதிப்பு	:	மே 2011
எழுத்து	:	10 புள்ளி
பக்கங்கள்	:	24
நூல் வெளியீடு	:	முல்லை பதிப்பகம் 323/10, கதிரவன் காலனி, அண்ணாநகர் மேற்கு, சென்னை – 40, தொலை: 26163596, 9840358301 mullaipathipagam@yahoo.com
அச்சிட்டோர்	:	பிரின்ட் பிராசஸ், ராயப்பேட்டை, சென்னை–14. செல்: 9789834226

விலை: ரூ. 10.00

1/3

சிவபுராணச் சிந்தனைகள் -1

சைவ சமய நூல்கள் பன்னிரு திருமுறையாகும். அவை தமிழ் வேதங்களாகவும், இம்மை மறுமைக்கு வழிகாட்டும் ஞான நூல்களாகவும் விளங்குகின்றன. இந்த ஞான நூல்களிலுள்ள அனைத்துப் பாடல்களும் மந்திரங்களாகும். மந்திரம் என்ற சொல்லுக்கு நினைப்பவரைக் காப்பது என்பது பொருளாகும்.

இப்பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக விளங்குவது திருவாசகமாகும். திருவாசகம் ஞானக் கருவூலமாக உள்ளது. மாணிக்கவாசகர் என்னும் மாணிக்க வாசகப் பெருமானால் அருளப்பெற்றது. 'திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்ற பொருள் மொழியை நாம்எண்ணி மகிழ்ச்சி யடைகிறோம். வள்ளல் பெருமான், "வான்கலந்த

மாணிக்க வாசக நும் வாசகத்தை யான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்தீஞ் சுவை கலந்து ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று உணர்வினால் வெளிப்படுத்தினார்கள்.

ஜி.யு. போப் அவர்கள் மனதைக் கவர்ந்த நூல் திருவாசகம். போப் அவர்கள் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதியதையே சீரிய தொண்டாகக் கருதினார்கள். மாணிக்க வாசகருக்கு இறைவன் தீக்கை செய்ததால் எழுதப்பெற்ற திருவாசகத்தில், "சிவபுராணம்" கலிவெண்பாவால் முதலில் அமைந்துள்ளது. தொண்ணூற்றைந்து அடிகள் கொண்ட இப்பாடலில் சிவத்தின் பெருமையும், நுட்பமும், செயலும் மிகவும் தெளிவாக, உய்த்துணரும் வண்ணம் உரைக்கப்படுகிறது.

சிவம் என்றால், 'அன்பு' என்பது பொருள். இதைத் திருமூலர்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர்
அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பார்ரே"

அன்பு என்பது தொடர்புடையார் இடத்தும் பிற உயிர்களிடத்தும் செலுத்தப்படும் ஓர் ஒப்பற்ற பண்பு. உண்மை `அறிவு இல்லாதவர் அன்பு வேறு, சிவம் வேறு என்று பிரித்து இரண்டாகக் கூறுவர். அந்தோ! அன்புதான் சிவமாக விளங்குவது என்று உணர்கின்றார் இல்லை. இந்த உண்மையான அன்புதான் சிவமாகும் என்பதை அறிந்த பிறகு அன்பே சிவமாக இருப்பதை நுகர்ந்து இன்புற்று இருப்பர்.

சிவபெருமான் கருணை உருவமானவன். ஆதலால் அன்பு வடிவுடையன் என்பது பெறப் படுகின்றது. அன்பு சிவமாயிற்று. திண்ணாராம் கண்ணப்பர் அன்புப் பிறம்பானவர். அவர் சிவ வடிவினரே. தனக்கும் சிவனுக்கும் வேறுபாடு

காணாத காரணத்தால் இறைவன் கண்ணில் தன் கண்ணை இடந்து அப்பினார். சிவபுராணம் என்றால் சிவனது அநாதி முறையான பழமை. பழமையில் காலந்தொட்ட பழமையும், காலங்கடந்த பழமையும் என இருவகை உண்டு. அவற்றுள் சிவனது பழமை காலங்கடந்த பழமையாகும் காலத்தோடு கற்பனை கடந்தது.

சிவனது பெருங்கருணையுள், வேதாகம, புராண, சாத்திர சுத்தசைவ, அபேத, அந்துவித, சித்தாந்த சம்பிரதாயம் முழுதும் அடங்கும். ஆகவே சிவபுராணமென்று பெயராயிற்று. இறைவனுடைய உண்மை அறிவாந்தப் பழமையே சிவபுராணமாகும்.

சிவனது அருவநிலை கூறவாது என்பர் சிலர்,

தேகனுமா விக்கமெனச் சிறந்த
திருவாசகத்தில்
பேசுதிருச் சிவபுராணத் தகவர்
பெருமைசொலில்

ஈசர்தமக் கியல்பான திருநாடு
முதலெலையயும்
மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற
அருட்குறிப்பாம்

என்பது பழைய திருப்பெருந்துறைப் புராணம்.

ஈசனார் தமக்கு இயல்பான, "நமச்சிவாய" என்பது முதலாக, மற்ற உலக உயிர்கள் அனைத்தும் குற்றமற்று வாழ்க என்று வாழ்த்துகின்ற அருட்குறிப்பாக விளங்குகிறது.

ஈசனுடைய திருநாமத்தைச் சொல்வதற்கும் அவனைக் கைகூப்பி வணங்குவதற்கும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அன்பு வேண்டும். இந்த அன்பு களங்கமில்லாததாக, தூய்மை யற்றதாக விளங்க வேண்டும். பிறரிடத்தும், விலங்கு, பறவை, மற்ற உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். அவ்வாறு அன்பு செலுத்துபவர்களிடத்தில், ஈசன், அன்பு செலுத்தி வாழ வைக்கிறான். அவர்களை வாழ்த்துகிறான்.

மதம், சாதி, இனம், நாடு, மொழி என்ற வேறுபாடு அற்ற இடமாக விளங்குவது "சிவம்".

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்ற கருத்தும் இதுவே.

இச்சிவத்தை "நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என முதலில் வாழ்த்துகிறார் மணிவாசகர். சிவனை வாழ்த்துவது சிவனுக்காக அல்ல: நாம் வாழ்வதற்காக வாழ்த்துகிறோம். "வாழ்த்துவதும் தாம் வாழ்வான்" என்பர். வாழ்த்துவதற்கும் அன்பு வேண்டும். பசிய மரத்திலே ஈரம் ஊடுருவி இருப்பது போல எல்லோரிடமும் அன்பு, மனதில் இருக்க வேண்டும். அன்பு நிலைத்திருக்கும் உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைவு பெற்றிருக்கும் பிறரிடத்திலும் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் ஒளிவிளக்குப் போன்றதாகும்.

சிவபுராணத்தின் உட்பொருள் அன்பின்

சிறப்பினை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. இவ்வன்பு நிலைபெற்றி ருக்குமாயின் உலக மக்கள் அனைவரும் இன்புற்று வாழ்வர்: வறுமையின்றி, பேதமின்றி ஒற்றுமையுடன் இன்புற்று வாழலாம் என்ற உயர்ந்த தத்துவக் கருத்தை விளக்குவதே சிவபுராணமாகும்.

அத்தகைய வழியை நாம் கடைப்பிடித்து பிறருக்கு உணர்த்தி வாழவேண்டுவதே அனைவருக்கும் கடமையாகும்.

ஸ்ரீ சற்குருநாதன் துணை.

சிவபுராணச் சிந்தனைகள் - 2

சிவபுராணத்தின் தொடக்கமாக மாணிக்க வாசகப் பெருமான் "நமச்சிவாய வாழ்க" நாதன் தாள் வாழ்க என்றார். நமச்சிவாய வாழ்க என்பது திருமந்திர வாழ்த்தாகும். திருவெந்தெழுத்தே, 'நமச்சிவாய' என நின்றது. இவ்வைந்து எழுத்துக்கும் தனித்தனியே பொருள் உணர்த்து வனவாகும்.

'ந' என்பது மும் மலங்களையும் தத்தம் தொழிலில் ஈடுபடுத்தி பரிபாகம் வருவித்தல் பொருட்டு மலங்களுடன் நின்று உயிரை மறைத்தலால் 'திரோதன சக்தி' என்று கூறப் படுவதாகிய சிவசக்தியையும், 'ம' என்பது உயிரைப்பற்றி நிற்கும் ஆணவம், மாயை, கன்மம்

என்ற மும்மலங்களையும், 'சி' என்பது சிவத்தையும், 'வ' என்பது சிவத்தோடு உடனாய் நிற்கும் திருவருளையும், 'ய' என்பது உயிரையும் உணர்த்தும் எழுத்துக்களாம். இவ்வெழுத்துக்கள் 'வணக்கம் சிவனுக்கு' என்னும் பொருளைத் தருவன.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பதும்
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதம் நாமம் நமச்சிவாயவே"

என்று கூறும் தேவாரப் பாடலால் செயற்படுதலும் பயனும் விளங்குவதாகும்.

.... நாதன் தாள் வாழ்க:
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க;
கோகழி யாண்ட குருமணி, தன் தாள் வாழ்க;
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க;
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்

என்பதுவரை திருவடிவாழ்த்து ஐந்து

அனைத்திற்கும் மூலகாரணமான திருவடியை வாழ்த்துகிறார்.

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்
கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்ற வள்ளுவ வாக்கும் உணரத்தக்கதாகும்.

உயிர்கள் அறியாமையினால் மாயையில் கட்டுண்டு ஒன்றிலும் நிலைபெறாது ஓடிக் கொண்டு இருக்கிற, மன வேகத்தைத் தொலைத்து ஆட்கொண்டவன்; பிறவியாகிய மரத்தை அறுக்கும் இறைவன்.

திருவருள் நோக்கிற்குப் புறம்பானவர் களுக்குத் தூரத்திலுள்ள சிவபெருமான்; கைகூப்பி வணங்குகின்றவர்களை உயர்வடையச் செய்யும் சிவன், அவனுடைய கழல்கள் வெல்வனவாகுக என மணிவாசகர் வாழ்த்துகிறார். சேற்றில் விழுந்த மணியை நீரால் கழுவி எடுத்து ஒளிவீசச் செய்வதுபோல மலச்சேற்றுள் அழுந்திய என்னை

அருள் நீரால் கழுவி பதிஞானம் உண்டாக்கிய திறத்தை மாணிக்கவாசகர் உணர்த்துகிறார்.

பிறப்பை அறுத்தலாவது இன்றுவரை அருளிய உடல்பற்றை நீக்கித், திருவடி ஞானத்தையே உடலாகக் கொண்டு 'ஆளுகை' என்பது பெறப்படுகின்றது. அன்புடையார்க்கு மணியின் சோதிபோலவும், அருளுக்குப் புறம்பானவர்களுக்கு பாலில் படுநெய் போலவும் விளங்குபவன். இதைச் 'சார்ந்தவர்களுக்கு இன்னமுதம் ஆயினானை' என்றும் திருநாவுக்கரசர் வாக்காலும் உணரலாம்.

கரங்குவித்து வணங்குவார் உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டு பூவினில் மனம் பொருந்தியவாறு போல சிவானந்தம் தோன்றும் என்றும் சிவபுராணத்தில் உணரலாம். இவ்வாறு கூறுவனயாவும் குருவின் துதி என்று பெரியோர் கூறுவர்.

"ஈசன்" ஈஸ்வரன் என்பதன் திரிபு. இது எப்பொருளையும் ஆள்வோன் எனப் பொருள்படும்.

அவனே தேசுடையவனாகவும் அன்பில் நின்ற அறிவு உருவனாயும் பிறப்பறுக்கும் மன்னாயும் நின்ற பரம்பொருள், அடியேனுக்கு எளியனாய் வந்து திருப்பெருந்துறை என்னும் தலத்தில் குருநாதனாக எழுந்தருளிய தேவன் கருணையைக் குறிப்பிடுகிறார். வற்றாத இன்பம் அருளும், மலையாகவும் விளங்குகிறார் என்பது மாணிக்க ....

"சிவம்" என்பது சாந்தம், மங்கலம், இன்பம் எனப் பல பொருள்படுதலின், சிவன் என்பது அத்துனை குணங்களையும் ஒருசேர உடையவன் எனப் பொருள்படும். சிவனை வணங்குவதற்கு சிவனின் திருவருள் துணை வேண்டுவதாகும். இறைவன் அருள் உள்ளிருந்து உணர்த்த "சீவபோதம்" கெட்டு "சிவபோதம்" மேலிடும். இது அவன் அருள் தந்த கொடையாகும். அதானாலேயே "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று அருளினார்.

அப்பர் சுவாமிகளும், "அவனருளே கண்ணாகக் காணின் அல்லால், இப்படியன், இந்நிறத்தன் இவனிறைவன் என்னெழுதிக் காட்டொனாதே" என்றதும் காண்க. சூரிய கிரணத்தின் ஒளியைக் கொண்டு சூரியனைப் பார்ப்பது போல சிவனருளை வாயிலாகக் கொண்டு சிவனை வணங்க வேண்டும்.

சிவனின் தாளை வணங்குவார்க்குத் துன்பம் சிறிதும் தோன்றாமல், இன்பமே நிலவும் ஆதலின் 'சிந்தை மகிழ' என்றார். அவர் புகழாகிய, 'சிவ புராணத்தை' உரைத்தால் வினைகள் அனைத்தும், தம் வலிமை குன்றித் தேய்ந்து மாய்ந்தே போகும் என்பார். 'முந்தைய வினை முழுதும் ஓய உரைப்பன்' என்றார்.

திருவாய் சித்தியும் முத்தியும் சீர்மை
மருளாது அருளும் மயக்கறும் வாய்மைப்
பொருளாய வேதாந்த போதமும் நாதன்
உருவாய் அருளாவிடில் ஓர்ஒண்ணாதே

என்ற திருமூலர் திருவாக்கால் நன்கு உணரலாம்.

சிவ நாமத்தை மந்திரமாகத் தியானித்தலும் சிவனின் பாதங்களை வாழ்த்துதலும் அவனுடைய கழல்களை வெற்றி பெறுகவெனப் புகழ்தலும், சேவடிகளை வணங்குதலும் சிவத்தின் திருவருள் பெறுவதற்கேயாகும்.

ஆகவே யாவரும் மனமகிழ்வுடன் இருக்கவும் வினைப்பயன் நீங்கவும் சிவபுராணத்தை ஓதித் திருவருள் பேற்றை அடைவோமாக.

ஸ்ரீ சற்குருநாதன் துணை

சிவபுராணச் சிந்தனைகள் - 3

ஞான தேசிகளாகிய சிவபெருமான் அருளினால் மாணிக்க வாசகப் பெருமானுக்கு மெய்ஞ்ஞானம் உணர்த்திய திறத்தைச் சிவபுராணம் எங்கும் காணலாம்.

பக்தியால் இறைவனை எளிதில் அடையலாம். கடுமையான விரதம், உடலை வருத்துதல், வனத்தில் சென்று தவம் செய்தல் போன்றவை களைக் காட்டிலும், இறைவனிடம் உண்மையான பக்தி செலுத்துவதால் திருவருள்பேறு அடையலாம். இறைவன் நாமத்தைச் சொல்லுதல், அடியார் கூட்டத்துள் இருந்தால், மனதில் அவனருளைச்

சிந்தித்தல் இதுபோன்ற பக்தியினால் அடியார்க்கு எளியவாகி இறைவன் ஆட்கொள்பவன் என்பதைச் சிவபுராணத்தின் வழியாக அறியலாம்.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி -

என்ற அருணகிரி நாதரின் வாக்கும் நோக்குதற்குரியதே.

பக்தி செலுத்துவதற்குப் பல பிறவிகள் எடுத்துப் பிறவிப் பயனை அனுபவித்து வீடுபேறு அடைதல் என்பது படிப்படியான வளர்ச்சியைக் குறிக்கின்றது.

இதை மாணிக்கவாசகப் பெருமான்,

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராசி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஇ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்கிறார்.

இப்பகுதியில் உயிர்களின் தோற்றமுறை அறிவியலார் கூறும் முறைக்கு முன்பின்னாக இருக்கின்றன. உயிர்கள் புண்ணிய பாவ இயல்பிற்கு ஏற்றவாறு உயர்ந்தும் தாழ்ந்தும் மாறி மாறிப் பிறத்தல் காரணமாகும் எனக் கருதலாம்.

எம்பெருமானே என அழைக்கும் மணிவாசகர், பெற்ற திருவருள் பேற்றையும் இறைவன், தன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்றதையும் மகிழ்ந்து உரைக்கிறார்.

இறைவனின் பல்வகைத் தன்மைகளையும் உளமுருகக் கூறுகிற பாங்கு மனதை உருக்குவதாகும். வேதங்கள் ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே, வெய்யாய், தனியாய், மெய்ச்சுடரே, இன்பப் பெருமானே, நல்லறிவே, ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய், புகுவிப்பாய், நின் தொழும்பில், சேயாய், நனியானே' என்று பலவாறு கனிவுடன் கூறுகின்றார். கறந்தபால் கரும்பின் சாறு, தேன்

மூன்றும் கலந்து நாவிற்கு இனிப்பது போல அடியார் சிந்தனையும் சிறந்து தேனூறி நின்று பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் என விளக்குகிறார். பிறவியே துன்பம் நிறைந்ததாகும். ஆகவே பிறப்பில்லாமல் இறைவன் திருவடி அடைதலையே சிலப்பேறு எனக் கொள்கின்றோம். இப்பிறப்பை முழுவதுமாக அறுத்து ஆட்கொள்பவன் சிவனே எனத் தெளிவுபடுத்தும் தன்மை மிகவும் சிறப்புடையதாகும்.

ஒன்பது வாயில்களினால் கூடிய உடல், அறம், பாவம் என்னும் கயிற்றால் கட்டி, மெய், வாய், கண் மூக்கு செவி என ஐம்புலன்களையும் படைத்து அவற்றின் வழியான் கலங்க என்றார். புலன்கள் அனுபவிக்கும் இன்பமே, பெரிதென எண்ணி மயக்கமுற்றேன். பெருமான் குருமூர்த்தியாக 'நிலந்தன் மேல்' வந்தார். அருள்செய்தார். இது குருந்த மரத்தடியில் குருவாக இறைவன் எழுந்தருளக் கண்டதைக் காட்டியதாகும்.

தாய், சேயின் மீது வைத்துள்ள பாசத்தினால் மல, மூத்திரங்களையும் பொருட்படுத்தாது ஊட்டி வளர்த்து வருபவர். சேய், நெறியல்லா நெறியில் சென்றால் சீயென வெறுப்பாள். நலன்தான் இல்லாதவனாகயான் இருந்தும் இறைவன் அவற்றை பொருட்படுத்தாது ஆண்டு அருளினான் என்பதை, "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்று பெருமானைப் புகழ்கிறார் மாணிக்கவாசகர்.

இறைவனுடைய அருட்பண்புகளை உணர்ந்தவாறு விளக்கும் திறன் எண்ணி மகிழ்வதற்கு உரியதாகும். அவற்றில் சிறப்பான ஒன்றை எடுத்துக் கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும். தேன், பல பூச்சிகளிலிருந்து வண்டால் திரட்டப்பட்ட இனிமையுடையது; 'அமுது' விண்ணர்களால் பாற்கடலைக் கடைந்து எடுக்கப்பட்டது. தேனில் சுவை நாம் அறிந்தது. 'அமுது' இலக்கிய உலகில் நாம் கேட்கப்படுவது. உயிரை வளர்த்து உடலை உறுதிப்படுத்தும் வகையில் இவ்விரண்டும் ஒப்புமை உடையதாகும்.

ஆதலால், 'தேனார் அமுதே' என்றார். அனுபூதி பெறுகிற அடியார்கள் உள்ளமே சிவபுரமாகக் கொண்டு வீற்றிருக்கிறான் என்பார். 'சிவபுரனே' என்றார்.

மேலும் இறைவன் பற்றறுத்துப் பற்றற்றான் பற்றினைப் பற்றச் செய்து உயர்வடையச் செய்வதால்,

"பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" என்றார். பாசமாகிய விருப்பம் போலத் திரியும் ஆடு மாடுகளைக் கட்டும் பாசமாகிய கயிறு போல உயிர்களைக் கட்டி நிற்கும் ஆணவ மலம், மாயாமலம் இவ்விரண்டையும் உணர்த்தும். அப்பாசத்தை நீக்கி ஆட்கொள்பவன் என்பது புலனாகும். ஞானிகட்கு ஒளியாகவும் ஞானிகள் அல்லாதாருக்கு இருளாகவும் இருப்பதால், "சோதியனே துன்னிருனே" என்று நுட்பமாகக் கூறுகிறார்.

வயலில் மேயச் செல்லும் கன்றை வலிந்து இழுத்து அதற்கு இனிய உணவு உண்பிக்கின்ற

மேய்ப்பானைப் போல பொறிவழியே புலன்களின் மேல் செல்கின்ற என்னை அருள் என்னும் அருங்கயிற்றால் கட்டி ஆட்கொண்ட தன்மையை, "ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமான்" என்றார்.

சிவபிரான் திருமணக் கோலத்திலிருந்த நம்பியாரூரரைத் தடுத்து ஆட்கொண்ட பெருமை இங்கு நினைவு கூறத்தக்கதாகும்.

"எல்லா உலகிற்கும் அப்பாலாய்
இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரும் உய்யக்கொண்டு இங்கே
அளித்தலால்
சொல்லார்ந்த நற்குரு சுத்தசிவமே"

என்று திருமூலர் கருத்தும் பொருந்துவதாகும்.

உரை அளவைால் சொல்லுதற்கு அரிய பரமசிவனை, ஏதோ ஒருவகையில் புகழ்ந்து பொருளை உணர்ந்து சொல்லும் ஞானச்

செல்வர்கள் சிவனடிக் கீழ் உள்ளார் ஆவர். அவரைப் பல்லோரும் வணங்குவர் என்ற நிறைவு செய்கிறார் மணிவாசகர். எனவே இறைவனை வாழ்த்தி அவன் தன்மையுணர்ந்து அன்பு செலுத்தினால், அவனருளைப் பெறலாம் என்பது உண்மையாகும். அவனருளாலே அவன் தாள் வணங்கி வாழ்வு பெறுவோமாக.

ஸ்ரீசற்குருநாதன் துணை.

சிவபுராணச் சிந்தனைகள்



ஸ்ரீலஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதீனம்



முல்லை பதிப்பகம்

திருச்சி வானொலி உரை